20th July 1957]

Sri V. K. KOTHANDARAMAN : 1952-வது வருஷத்திய "பாலன்ஸ் ஷீட்டுப்படி" ரூ. 60,000 நஷ்டம் என்பது உண்மை. ஆனால் ரூ. 60,000 எப்படி நஷ்டம் ஏற்பட்டது என்பதை அவர்களே வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு முன்பு ஒவ்வொரு வருஷத்திலும் லாபம் கிடைத்திருக்கிறது. இந்தியாவிலேயே இது மிகச் சிறந்த மில், அருமையான ஸில்க் துணிகளை தயாரிக்கக்கூடிய மில் என்று அதற்கு கிடைத்திருக்கக்கூடிய "சர்டிபிகேட்" மூலமாக தெரிந்துகொண்டிருக்கிறேன். கொள்ளேகால் மில் மைசூர் ராஜ்யத்திற்கு போய்விட்ட காரணத்தினாலே, இந்த மில்லை சர்க்கார் எடுத்து நடத்துவதற்கு முன்வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அது தனியார் தொழில் நடத்தக்கூடிய துறை. சர்க்கார் அதை எடுத்து நடத்துவதற்கு ஆலோசனை இல்லை.

Executive Officers under the Madras Hindu Religious and Charitable Endowments

* 164 *Q*.—**Sri T. T. DANIEL** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons that applied for the posts of Executive Officers under the Madras Hindu Religious and Charitable Endowments with reference to the advertisement made therefor in December 1955;

(*b*) the number of appointments made so far; and

(*c*) whether anybody has been appointed from the Kanyakumari district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) 770.

(*b*) 75.

(*c*) No.

Sri T. T. DANIEL : May I know whether there were applications from the Kanyakumari district and whether Government will be pleased to go into the desirability of taking some persons from that district preferably those belonging to the Harijan and Backward communities?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There were applications from the Kanyakumari district. All these applications were received and considered when that district was part of Travancore-Cochin State. Therefore they were not considered for selection. But when appointment are to be made in the Kanyakumari district fresh applications will be called for. These people may apply again. Then they will be considered for appointment.

Sri A. VEDARATHNAM PILLAI : "எக்ஸிகியூடிவ் அபீசர்களை" வைத்து நிர்வகிப்பதற்கு போதிய வருமானம் இல்லாத ஆலயங்களிலும்கூட, இம்மாதிரி ஆபீசர்கள் நியமிக்கப்படவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறதா ? அதனால் கோவில் இதர செலவுகளுக்கு பணம் இல்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறதா ? அது பற்றி அரசாங்கம் என்ன யோசனை செய்கிறார்கள் என்பதை தயவு செய்து அறிவிக்க முடியுமா ?

[20th July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிர்வாக அதிகாரிக்கு அவசியம் உண்டு என்று கருதப்படும் அவருடைய சம்பளத்தைக் கொடுக்கக் கூடிய சக்தி தேவஸ்தானத்திற்கு இருக்கிறதா என்று பரிசீலனை செய்த பிறகுதான், குறிப்பிட்ட " கிரேடிலே " அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துகிறது.

SRI R. SRINIVASA IYER : Is there any proposal to recruit executive officers by direct recruitment ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is exactly what I have said in reply to the main question. Applications were called for and about 75 were selected by direct recruitment.

SRI K. SATTANATHA KARAYALAR: இப்படி பொறுக்கி எடுக்கப்பட்ட " எக்ஸிகியூடிவ் ஆபீசர்களில் " யாருமே ஹரிஜனங்கள் எடுக்கப்படவில்லை என்று பொதுவாகத் தெரிகிறது. அது உண்மைதானா ? அப்படி எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், எத்தனை பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice Sir.

SRI A. VEDARATHNAM PILLAI : இந்த நிர்வாக அதிகாரிகளில் சிலர் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களாகவும், அதற்கு விரோதமான பிரசாரம் செய்கின்ற மனப்பான்மை படைத்தவர்களாயும் இருக்கிறார்களா? அப்படியிருந்தால் அவர்களை தவிர்ப்பதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா? அவர்களுக்கு ஏதாவது மத சம்பந்தமான அறிவு, தகுதி, படிப்பு இருக்க வேண்டுமென்று அரசாங்கம் ஒரு திட்டம் வகுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு தகுதியின்மை எப்பொழுது இருந்தாலும், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : தீண்டாமைக்கு ஆதிகாரணமாக இருக்கிற வேதபுராணங்களும், அதற்கு ஆதாரமாக இருக்கிற கடவுளும் இருக்கின்ற இடத்திலே தீண்டாதவர்கள் போகக்கூடாது என்ற ஒரு பரம்பரை பழக்கம் இருக்கும் காரணத்தினால், அதிகமான ஆதித்திராவிட " எக்ஸிகியூடிவ் " ஆபீசர்களையும் மேலும் அந்தக் கோவில்களில் மற்ற வேலைகள் செய்வதற்கும் அதிகமாக ஹரிஜனங்களையும் நியமிப்பதற்கும் சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹரிஜன சமூகத்திலிருந்து பலர் நிர்வாக அதிகாரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றனர். ஆனால் அவர்களை விசேஷமாக அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

SRI M. P. SUBRAMANIAM : கோவில்களுக்கு நியமிக்கப்படும் " எக்ஸிகியூட்டிவ் " ஆபீசர்களுக்கு கடவுள் பக்தி இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கு கோவில் நிர்வாகத்திற்கு வேண்டிய திறமை அவசியமா அல்லது பக்தி அவசியமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிர்வாகத் திறமையோடு கூட, கடவுள் பக்தியும் ஓரளவுக்கு வேண்டும். அதற்காக " செருப்பு போட்டுக் கொண்டு கடைசி வரையில் போவேன் " என்று ஒருவர் சொன்னால் அவர் நிர்வாக அதிகாரியாக இருப்பதற்கு லாயக்கு இல்லை.

SRI K. B. S. MANI : கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்துகொண்டு, இது வரையில் கோவிலில் சேவை செய்துகொண்டிருந்தவர்கள், உண்மையான வேத புராணங்களை படித்து நல்ல தேர்ச்சி பெற்றவர்களில் பலர்

20th July 1957]

கோவில் சொத்துக்களை கொள்ளையடித்து அதற்காக தண்டனை பெற்றது அர்சாங்கத்திற்கு ஞாபகம் இருக்கிறதா ? (சிரிப்பு.) ஆகையால் இத்தகைய ஆபிசர்களுக்கு அம்மாதிரி ஒரு குறிப்பிட்ட எண்ணம் இருக்கவேண்டும என்பதை வற்புறுத்தாமல், நேர்மையையும் திறமையையும் மட்டும் கவனித்து அவர்களிடம் அந்தப் பொருப்பை கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இதுபற்றி முன்பே சொன்னேன். நிர்வாகத் திறமையும் வேண்டும், நேர்மையும் வேண்டும், பக்தியும் வேண்டும் இவைகளெல்லாம் இதற்கு வேண்டிய தகுதி என்று அரசாங்கம் கருதுகிறது.

SRI K. ANBAZHAGAN : இத்தகைய கோவில் நிர்வாகத்தை நடத்து வதற்கு கடவுள் பக்தி தேவை என்பதை ஒப்புக்கொள்ளுவதாக இருந்தா லும், செருப்புப் போட்டுக்கொண்டால் கடவுள் பக்தி இருக்காது என்ற கருத்தை அரசாங்கத்தைச்சார்ந்த அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். புராணங்களில் கண்ணப்பநாயனர் செருப்பு அணிந்துகொண்டிருந்த காலை சிவபெருமான் கண்ணில் ஒத்தினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகை யால் பக்திக்கும் செருப்புக்கும் தொடர்பு இல்லையென்பதை அரசாங்கம் உணருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கொள்கையைக் கேட்ட கனம் அங்கத்தினர் நன்றாக இலக்கியம் படித்து தத்துவத்தை உணர்ந்தவர்கள் என்றும் நான் நினைக்கிறேன். கண்ணப்ப நாயனர் அம்மாதிரி செய்தார் என்பதற்காக நாமும் செருப்பு போட்டுக்கொண்டு கோவிலுக்குள் போகலாம் என்பதை யாரும் ஒப்புக்கொள்ளமுடியாது.

SRI R. CHIDHAMBARA BHARATHI : மதசார்பற்ற நமது சர்க்கார் ஆஸ்தீக உணர்ச்சியோடு கோவில் நிர்வாகத்தை நடத்துவதற்கு முன்வரு வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோவில் நிர்வாகத்திற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமோ அவைகளெல்லாம் வற்புறுத்தப்பட்டு வருகிறது என்று முன்பே சொன்னேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஆஸ்திகத்திற்கும் நாஸ்திகத்திற்கும் அப்பாற்பட்ட அறம் என்று சொல்லப்படும் வழியிலே அறநிலைய அமைச்சர் நல்ல நேர்மையான பாதையிலே அறச்சாலைகளை நிர்வாகம் செய்ய முற் படுவார்களா ?

MR. SPEAKER : **I am afraid that the supplementary question is going far away from the main question,**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அறம் வேறு, தேவஸ்தான நிர்வாகம் வேறு என்பதை கனம் அங்கத்தினருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

Influenza

* 165 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9-40 a.m.

(*a*) whether there has been an outbreak of influenza in the State during May 1957;

(*b*) the number of people affected; and

(*c*) the steps taken by the Government to arrest the spread of the disease?